★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No. QB/8946/78

மலர்: 21 ஆனி: 19 ஷஃபான்: 7 இதழ்: 141

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 3-7-79

LIBRARY

# ஆலடி அருணா - அமிர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் திடீர்விஜயம் மேற் கொண்ட இந்திய பாராளு மன்ற அங்கத்தவர் திரு ஆலடி அருணா, சட்டசபை அங்கத்த வர் திரு. ச. பரமசாமி ஆகிய இருவரும் தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கத்தையும் மற்றும் சில கூட்டணி எம். பிக்களையும் சந்தித்து, ஈழத்தமிழர் பிரச்சினைகள்பற்றி கலந்துரையாடினர்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில், பண்டிதர் கா. பொ. இரத் தினம், திரு. வி. என். நவ ரத்தினம் மற்றும் கூட்டணிப் பிரமுகர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

சுமார் ஒருமணிநேரம்வரை நடைபெற்ற இச் சந்திப்பில், ஈழத்தமிழர் இன்று எதிர் நோக்கும் பல்வேறு கஷ்டங் கள், பிரச்சினைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட் டது. திரு. ஆலடி அருணா வும், திரு. பரமசாமியும், இலங்கைத் தமிழர் சம்பந்தப் பட்ட சில சரித்திரத் தொடர் புகள், புள்ளிவிபரங்கள் ஆகி யவற்றை கோரியிருந்ததாகத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணம் வந்த இவர்கள், நேற்றுமுன்தின மிரவே கொழும்பு திரும்பினர்; இவர்களுடன் சில இந்தியப் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

★ இன்ஸ்பெக்டர் குருசாமி படுகொலை

# பொலிஸ் உயர்மட்ட குழு

# தீவிர விசாரணை

## இருதினங்களில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

### நேற்றுவரை எவரும் கைதாகவில்லை

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினமிரவு துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி படுகொலையுண்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். பி. குருசாமியின் கொலைதொடர்பான புலன்விசாரணைகளை, பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. சிறில் ஹேரத் தலைமையிலான உயர்மட்ட பொலிஸ்குழு இப்பொழுது மேற்கொண்டுவருகிறது.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது நடைபெற்றுவரும் இப் புலன்விசாரணைகளைத் தொடர்ந்து இரண்டு நாட்களில் பொலிஸ் தலைமையகத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளிநாட்டுத் துப்பாக்கியும் பாவிக்கப்பட்டது?

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் இன்ஸ்பெக்டர் குருசாமியை சுடுவதற்கு இரண்டு துப்பாக்கிகள் பாவிக்கப்பட்டதாகவும் இதில் ஒன்று வெளிநாட்டுத் துப்பாக்கியென்றும் மற்றது உள்நாட்டில் தயாரிக்கப் பட்டதென்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந் துள்ளது

யாழ். நீதவான் திரு. விமல் திஸநாயக்கா நேற்று மரணவிசாரணை நடத்தினர். சாட்சிகளைப் பொலிஸ் சார் ஜன்ட் அன்ரனி ஆஜர் செய் தார். டாக்டர் சரவண பவானந்தன் பிரேத பரி சோதனை நடத்தினர்.

### ஆறு காயங்கள்

தலை, முகம், நெஞ்சு, தோள், கண், காது ஆகிய இடங்களில் 6 காயங்கள் ஏற் பட்டதாகவும், 2 குண்டுகள் உடலிலிருந்து எடுக்கப்பட்ட தாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

### வீட்டின் படிக்கட்டில்

வீட்டுப் படிக்கட்டில் இன்ஸ்பெக்டர் குருசாமியும், மருமகன் கனகரத்தினமும், புஸ்பதேவி, 7 வயது பேரன் பிரகாஸ் ஆகியோர் இருந்த தாகவும். இரவு 8 மணியள வில் இன்ஸ்பெக்டரைத் தவிர மற்றையோர் சாப்பிட சென்றுவிட்டதாகவும் கூறப் படுகிறது.

### சைக்கிளில் ஓடினர்

மூன்று வெடிச்சத்தம் கேட் டதைத் தொடர்ந்து குரு சாமியின் துணைவியார் தையல் அம்மா வெளியே வந்தபோது 3 இளைஞர் சைக்கிளில் ஏறி ஓடியதாகவும் கனகரத்தினம் சிறிது தூரம் பின்சென்ற தாவும்விசாரணையில் கூறப்பட் டது.

வீட்டிலுள்ளோர் அவரை உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதித்தனரென்றும் அங்கு அவர் மரணமானாரென்றும் கூறப்படுகிறது.

### 25 வருட பொலிஸ் சேவை

இன்ஸ்பெக்டர் குருசாமி, இன்ஸ்பெக்டர் குருசாமி படுகொலை தொடர்பாகப் பலர் விசாரணை செய்யப்பட்டு வருவதாகப் பொலிஸ் வட் டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. பொலிசார் சந்தே கிக்கப்படும் சிலர் பொலி சாரின் தீவிர விசாரணைக் குள்ளாகியுள்ளனர்.

இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை, இக் கொலை தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

யாழ். பொலிஸ் அதிபர் திரு. லியோ பெரேராவின் உதவி யாளராகக் கடமையாற்றி வந்தார். 56 வயதான இன்ஸ்பெக்டர் குருசாமி 25 வருட காலம் பொலிஸ்சேவை யில் கடமையாற்றி வந்தார்.

6-ம் பக்கம் பார்க்க

## வல்வை வாசிகள் இருவர் தேடப்படுகின்றனர்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் குருசாமி கொலை செய்யப்பட் டது சம்பந்தமாக வல்வெட் டித்துறையைச் சேர்ந்த இரு வாலிபர்கள் பொலிசாரால் தேடப்பட்டு வருகின்றனர்.

இன்ஸ்பெக்டர் குருசாமி சுட்டுக் கொலை செய்யப்பட் டது தொடர்பாக இதுவரை பலவாலிபர்கள் பொலிசாரின் விசாரணைக்குள்ளானதாகத் தெரிகிறது.

இன்ஸ்பெக்டர் குருசாமி யின் வீட்டிற்கு எதிர் வீட் டில் நடைபெற்ற பூப்பு நீராட்டு வைபவத்தில் கலந்து கொள்வதற்கு சம்பவம் நடந்த தினத்தன்று வல்வெட்டித் துறையிலிருந்து இரு வாலி பர்கள் வந்திருந்ததாகவும் இவர்களுக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தமிருக் கலாமென்றும் பொலிசார் சந்தேகிக்கின்றனர். வல்வெட் டித்துறையைச் சேர்ந்த ஒரு வாலிபர் நேற்றுப் பிற்பகல் பொலிசாரால் விசாரணைக் காகக் கூட்டிச் செல்லப்பட்ட தாகக் கூறப்படுகிறது.

### தொண்டமானாறு சம்பவம்

தொண்டமானாற்றில் இரு தினங்களுக்கு முன் கணவ னும் மனைவியும் கொலை செய்யப்பட்டதற்கும் இன்ஸ் பெக்டர் குருசாமியின் கொலைக்கும் தொடர்பிருக்கக் கூடுமென்றும் பொலிஸ் வட் டாரங்கள் சந்தேகிக்கின்றன.

இன்ஸ்பெக்டர் குருசாமி கொலை:

## "பொதுமக்கள் எமக்கு உதவவேண்டும்"

### யாழ். பொலிஸ் அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"இன்ஸ்பெக்டர் குரு சாமி கொலைச் சம்பவம் தொடர்பான தகவல்களை பொதுமக்கள் நேரடியாகத் தர அஞ்சினால் தொலைபேசி மூலமோ, கடிதமூலமோ அறிவிக்கலாம். அவர்கள் பற்றிய விபரங்கள் இரகசி மாக வைத்திருக்கப்படும்."

யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் திரு லியோ பெரேரா நேற்று மேற்கண்ட வேண்டு கோளை விடுத்துள்ளார். பொலிஸ் அதிபர் மேலும் கூறியிருப்பதாவது:

வன்முறைகளுக்கு எதிராக சட்டமூலம் நடவடிக்கை எடுப் பதற்கு பொதுமக்களின் ஒத் துழைப்பு அவசியம் தேவைப் படுகிறது.

"யாழ்ப்பாணத்தில் பொலி ஸாரின் வழக்கமான கடமை இடம் பெறும் பொதுமக் கள் கிலிகொள்ளவேண்டிய அவசியம் இல்லை.

"இக் கொலை தொடர் பாக தகவல் தெரிந்த பொது மக்கள் நேரடியாக கடித மூலம், அல்லது டெலிபோன் மூலம் தொடர்பு கொள்ள லாம். பெயர் கொடுக்க விரு ம்பாதவர்கள் பெயரில்லா மலே தகவல் தரலாம். தகவல் கொடுப்பவர்களின் விபரம் எதுவும் வெளியிடப்படமாட் டாது

"இச்சம்பவத்திற்கும் அர சியலுக்குமுள்ள தொடர்புபற்றி பொலிசாருக்கு அக்கறையி ல்லை. ஆனால் குற்றச்சம்பவங் களுக்குப் பொறுப்பாளிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவது பொலிசா ரின் கடமை. அந்தக் கட மையைச் செய்வதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு எம க்கு அவசியம் தேவைப்படு கின்றது" என்று பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

56 வயதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. குருசாமி பொலிஸ் அதிபரின் சொந்த உதவியாளராகக் கடமையா ற்றி வந்தார்.

உடுப்பிட்டி

## ப. நோ. கூ. சங்க ஊழியர் திடீர் வேலைநிறுத்தம்!

(நெல்லியடி)

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தைச் சேர் ந்த 84 ஊழியர்கள் நேற்று முதல் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

ஐம்பது ரூபா சம்பள உய ர்வு உடனடியாக வழங்கப் பட வேண்டும் என்னும் கோரி க்கையுடன் மொத்தம் ஒன் பது கோரிக்கைகளை முன்வை த்து இந்த ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ள னர்.

தங்களின் கோரிக்கைகளை இயக்குனர்சபை உதாசீனம் செய்வதாகவும், பேச்சுவார் த்தை நடத்த விரும்பவில்லை என்றும், தங்களின் கோரிக் கைகள் ஏற்றுக்கொள்ளும் வரை வேலைநிறுத்தம் நீடிக் கும் என்றும், ஊழியர்கள் சங்கத் தலைவர் தெரிவித்துள் ளார்.

## ஐம்பது ரூபா அலவன்ஸ்

(கொழும்பு)

அரசாங்கம் வழங்கும் ஐம் பது ரூபா மாத அலவன் ஸைப் பெறுவதற்குத் தகுதி யற்ற சுமார் பத்தாயிரம் பேர் பிழையான தகவல்களை வழங்கி தொடர்ந்து மாதந் தோறும் ஐம்பது ரூபா அல வன்ஸை பெற்றுவருகின்றார் களாம். வேலைசெய்யும் பல ருங்கூட இந்த ஐம்பது ரூபா உப (உதவிப்பணத்தை) அல வன்ஸை தொடர்ந்து பெற்று வருவதாக இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்விதமாக தவறானமுறை யில் பெற்றுக்கொள்பவர்கள் குறித்து அவ்வப்பகுதி அர சாங்க அதிபருக்கு தகவல் தருமாறு பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர். (ஐ)

## ஜி. சி. ஈ. பரீட்சை

[கொழும்பு]

ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சையும் ஜி. ஸி. ஈ. [உயர்தரம்] பரீட்சையும் அடுத்த மாதம் பத்தாம்திகதி முதல் இருபத்தோராம் திகதி வரை நடைபெறும்.

பழைய கல்வித்திட்டப்படி நடைபெறும் ஜி ஸி ஈ [உயர்தரம்] பரீட்சைக்கு 33,000 பரீட்சார்த்திகள் தோற்றுவார்கள். [ஐ]

## வரி விளம்பரம்


### தேவை

ஆண்களின் உடுப்புக்கள் தைப்பதில் அனுபவமுள்ள ஆண், பெண் தொழிலாளர்கள் தேவை. நேரில் வரவும் P. M றெயிலேஸ், 399, மணிக்கூட்டுவீதி, (பெருமாள் கோவிலடி), யாழ்ப்பாணம். 2931

பெண்களுக்கான உடுப்புகள் வெட்டித் தைக்கக்கூடிய திறமை வாய்ந்த பெண்தொழிலாளர் தேவை. நேரடித் தொடர்பு கொள்க. மிஸ்ஸின்ஸ், இல. 22/1, பெரிய கடை, யாழ்ப்பாணம். 2932

### விற்பனைக்கு

ஜே சி. இனத்தைச்சேர்ந்த மாடு விற்பனைக்குண்டு ஒரு நாளைக்கு 10 போத்தல் பால் தரக்கூடியது விபரங்கட்கு: திருமதி ச. தியாகராசா, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். 2928

### பயிற்சி

விசேட 3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-07-1979 ஆரம்பமாகவுள்ளது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னோலொஜி 11/B, மொம்சாக் கட்டிடம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 2929

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

கோப்பாய், கோப்பாய் தெற்கு, முதலியார் வளவைச் சேர்ந்த காலஞ்சென்ற தெய்வேந்திரா குமாரசுவாமி என்பவரின் மரணசாதனத்தினதும், எழுத்தாவணத்தினதும் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

தம்பிப்பிள்ளை தெய்வேந்திரா குமாரசுவாமி கைம்பெண் சிவகாமிப்பிள்ளை, முதலியார் வளவு, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மனுதாரர்.

மரணசாதன வழ. இல. த/3398

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேற்குறிப்பிடப்பட்ட நீதிமன்றத்தில் இறந்தவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் இருப்பின் 1979ம் ஆண்டு ஆடி மாதம் 6ம் திகதிக்கு முற்பகல் 9 மணிக்கு முன்னர் இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1979ம் ஆண்டு ஆனி மாதம் 19ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

2931

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# தாயின் புத்திமதிகளை ஏற்க மறுத்த மகள் தற்கொலை!

(புலோலி)

வீட்டுவேலைகளைத் திறம்படச்செய்ய வேண்டும் என்று தாய் மகளுக்குப் புத்திபுகட்டினார். ஆனால் மகளோ இப்புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளாததுடன் நஞ்சருந்தி தற்கொலையும் செய்துகொண்டார். இச்சம்பவம் சாவகச்சேரிப் பொலிஸ் பகுதியில் நடைபெற்றுள்ளது.

வரணியைச் சேர்ந்த இராசேஸ்வரி (வயது 20) என்ற யுவதியே தற்கொலைசெய்து கொண்டவராவர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எம். வி புவனேந்திரன் விசாரணை நடத்தினார் சாவகச்சேரிப் பொலிசார் சாட்சியங்களை ஆஜர் செய்தனர்.

இறந்தவரின் தாய் இலட்சுமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- இறந்தவர் எனது இளைய மகள், அவர் இன்னமும் திருமணம் செய்யவில்லை அவர் முற்கோபக்காரி சம்பவதினம் தேநீர் வைக்கச்சென்ற இறந்தவர் வேறு வேலைகளில் ஈடுபட்டபடியால் நான் அவரை வேலைகளை திறம்படச்செய்ய வேண்டுமென புத்திமதி கூறினேன், ஆனால் இப்புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளாத அவர் உடனே அடுப்படியிலிருந்த வெளியேறி சற்றுநேரத்தின்பின்னர் வந்து தான் மருந்துகுடித்துவிட்டதாகக் கூறினார் பின்னர் அயலவர்கள் ஓடிவந்துஇறந்தவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது அங்கு அவர் இறந்துவிட்டாரெனத் தெரிவிக்கப்பட்டது இறந்தவருக்கு காதல் பிரச்னைகளோ அல்லது வேறு பிரச்னைகளோ இல்லை. நான் கூறிய புத்திமதிகள் பிடிக்காதபடியினால் அவர் மருந்து குடித்திருக்கலாம்.

மந்திகை அரசினர் வைத்தியசாலை பிரதம டாக்டர் எஸ். ஜி. லூதர் பிரேதபரிசோதனை நடத்தினார் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (இ)

# சப்இன்ஸ்பெக்டர் பயிற்சி பெறும்போது திடீர்மரணம்

(மாவிட்டபுரம்)

நீண்டகாலமாக பொலிஸ் சார்ஜண்டாக இருந்து சப் இன்ஸ்பெக்டராகப் பதவி உயர்வுபெற்று அதற்கான பயிற்சி பெற்றுவந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் திடீரென மரணத்தை தழுவிக் கொண்டார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த கே சிவப்பிரகாசம் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

சப் இன்ஸ்பெக்டருக்கான பயிற்சியை களுத்துறை பொலிஸ் நிலையத்தில் பெற்று வந்த இவர் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு மரணத்தை தழுவிக்கொண்டார்.

இவரது சடலம் பொலிஸ் மரியாதைகளுடன் களுத்துறையிலிருந்து தெல்லிப்பழைக்கு கொண்டுவரப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

5 பிள்ளைகளுக்குத் தந்தையான மேற்படி பொலிஸ் சார்ஜன்டின் இறுதிச் சடங்கில் கல்முனை பொலிஸ் பொறுப்பதிகாரி திரு மிஸ்கின், சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு சுகுனேந்திரன். காங்கேசன்துறை உதவி பொலிஸ் அதிபர், காங்கேசன்துறை பொலிசார் உட்பட பல பொலிஸ் உயர் அதிகாரிகளும் கலந்து அஞ்சலி செலுத்தினர். (இ)

# வெளிநாடு செல்வதற்கான பொலிஸ் அனுமதிக்கு ரூ. 5

(மாவிட்டபுரம்)

வெளிநாடு செல்பவர்களுக்கு இலவசமாக இதுவரை வழங்கப்பட்டுவந்த பொலிஸ் அனுமதிக்கு இனிமேல் 5 ரூபா கட்டணம் அறவிடப்படஉள்ளது

வெளிநாடுகளில் வேலைதேடியும், உயர்கல்விபெறவும் பல் வேறுவழிகளில் செல்பவர்கள் இனிமேல் தமது பொலிஸ் அனுமதிக்கான விண்ணப்பங்களை அவர்கள் வதியும் பிரிவிலுள்ள பொலிஸ் நிலையத்தில் வழங்கி அதற்கு 5 ரூபா கட்டணமும் செலுத்தி ரசீது வாங்கினால் விசாரணைகள் முடிவடைந்ததும் அவர்களது விண்ணப்பங்கள் குறிப்பிட்ட பொலிஸ் அனுமதி ஏஜன்சிக்கு அனுப்பிவைக்கப்படும்.

முன்னர் வெளிநாடு செல்வோர் தமது பொலிஸ் அனுமதிக்கான விண்ணப்பங்களை அவ்வப்பகுதி உதவிப் பொலிஸ் அதிபர்களிடம் கையளித்தால் எவ்வித கட்டணமுமின்றி விசாரணையின் முடிவில் பொலிஸ் அனுமதி வழங்கப்பட்டுவந்தது. (இ)

# தச்சந்தோப்பில் தமிழகப் பேராசிரியர் சொற்பொழிவு

(கரவெட்டி)

கரவெட்டி தச்சந்தோப்பு விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்தமாதம் 30ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகறது.

வழமைபோல் இவ்வருட உற்சவத்திலும் பங்களூர் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் பேராசிரியர் என். இருஷ்ணமூர்த்தி சமய ஆராய்ச்சி பற்றி சொற்பொழிவாற்றி வருகிறார்.

தொடர்ந்து 9ம் திகதி வரை 'சாளத்தி மலையில்', 'கங்கை கரையில்', 'செம்மைசேர் நாமம்', 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்', 'பொற்புடைத் தெய்வம்', 'திராத விளையாட்டுப்பிள்ளை', 'குன்றும் குமரனும்' ஆகிய பங்களில் திரு. இருமூர்த்தி தொடர்ந்து உரையாற்றுவார். [ஈ]

# "இளைஞர்கள் மனதில் கூட்டுறவுக் கொள்கை வேண்டும்"

— வி. என்.

(மட்டுவில்)

"ஒருவருக்காகப் பலர், பலருக்காக ஒருவர் என்ற கூட்டுறவுத் தாரக மந்திரத்தை நமது இளைஞர்கள் மறந்துவிடக்கூடாது அந்த ஒரு மந்திரமே இளைஞர் உலகத்தை ஒன்று சேர்த்து நாட்டினதோ, கிராமத்தினதோ வளத்தைக் கட்டிக்காக்க அபிவிருத்தியைப் பெருக்க கலை கலாச்சாரத்தை வளர்க்க இளைஞர்களைத் தூண்டிக்கொண்டிருக்கிறது"

இவ்வாறு சாவகச்சேரி எம்பி திரு வி என் நவரத்தினம் மட்டுவில் சோமாஸ்கந்தா சனசமூக நிலைய படிப்பகத்தை திறந்து வைத்து பேசுகையில் குறிப்பிட்டார் சோமாஸ்கந்தா சனசமூக நிலையத்தாரின் விளையாட்டுக்கழகத்தை சாவகச்சேரி விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் திரு என் தியாகராச திறந்து வைத்தார்.

நிலையத் தலைவர் திரு என் குண வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திரு நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

"நமது இளைஞர் சமுதாயத்தில் ஒன்றுபட்ட சகோதரத்துவ மனோபாவம் வளர வேண்டும் அப்பொழுதுதான் நமது நாடு சமுதாயம் வளர்ச்சியடைய முடியும், இன்று நமது மத்தியில் புரையோடியுள்ள சாதியின் பேரால் தோன்றும் ஏற்றத் தாழ்வுகளை அகற்றமுடியும்: எமது இளைஞர்கள் மத்தியில் கூட்டுறவு ஏற்படவேண்டும். அதற்கு நாம் சாதி அமைப்பை அறவே மாற்ற வேண்டும்"

ஆசிரியர் திரு இராசலிங்கம் திரு எஸ் பீ கிருஷ்ணன் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

செயலாளர் திரு பொ தி நாவுக்கரசு நன்றி கூறினார். (கு)

# நாளை மாவிட்டபுரத்தில் சங்காபிஷேகம்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆறும் திருவிழாவான நாளை கும்பாபிஷேக தின விசேடமாக சங்காபிஷேக விழா நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை சங்காபிஷேக விழாவும் அதையடுத்து திருக்கல்யாண உற்சவமும் தண்டிகைத் திருவிழாவும் இடம்பெற உள்ளது.

கடந்த 29ம் திகதி கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமான ஆலய உற்சவம் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது. வழமையைவிட இம்முறை அடியார்களது தொகை அதிகரித்துக் காணப்படுகிறது உற்சவ ஒழுங்குகளை ஆலய ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் மேற்கொண்டுள்ளார். (கு)

# இன்று கம்யூனிஸ்ட் கட்சி 36வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 36 வது ஆண்டு நிறைவு விழாவையிட்டு யாழ். கட்சிக் காரியாலயத்தில் விசேடகருத்தரங்கொன்று நடைபெறவிருக்கின்றது.

கம்யூனிஸ்ட் கட்சி யாழ். மாவட்டச் செயலாளர் திரு. ஏ வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் 'கட்சியின் கடந்த கால வரலாறும் எதிர்கால நடவடிக்கைகளும் பற்றி கருத்துப் பரிமாற கட்சிபேதமின்றி சகலரும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஈ)

# இன்றைய பலன்

ஆனிமாதம் 19-ம் திகதி

(செவ்வாய்க்கிழமை)

(3-7-1979

**மேடம்:** ஒளிமயமான தினம், கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு, ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள், இன்று ஏற்படும் திருப்புமுனை நிம்மதியை அளிக்கும், நலனும் உண்டு.

**இடபம்:** கடன் தொல்லைகள் கவலையைத்தரும், உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும், நண்பர் ஒருவரின் நடவடிக்கை கலக்கத்தைத்தரலாம், புதிய முதலீடுகளை இன்று தவிர்ப்பதுடன் உஷாராக இருக்கவும்.

**மிதுனம்:** தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும், சிலருக்கு ஆத்மீகவிடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம், பொதுப்பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராதவகையில் பொருள் விரயமாகும், கொடுக்கல் வாங்கல்களால் பிணக்குகள் ஏற்படும், நண்பர்களைப் பகைத்துக் கொள்வீர்கள், வீணான சிந்தனைகளுக்கு இடமளியாது இருக்கவும்.

**சிங்கம்:** உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும், வியாபாரத்துறையில் விருத்தியுண்டு, தாய்வழிப் பொருள்வரவுக்கும் இடமுண்டு, உயர்கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாக தினம்.

**கன்னி:** பொருளாதாரத் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும், புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும், தொழில் புரியும் இடத்தில் போட்டி மனப்பான்மையைத் தவிர்த்துக் கொள்வது நன்று.

**துலாம்:** குடும்பத்தில் சுகக்குறைவுகள் தென்படலாம், அதிக அலைச்சலின்மூலம் கவலைகள் உருவாகும், முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை போடுவதற்கு முயற்சிகள் நடைபெறும், உணர்ச்சிவசப்படாதிருத்தல் வேண்டும்.

**விருச்சிகம்:** தனத்துடன் வாழ்வு இன்று தகருதுகிடைக்கும், சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு, நீண்ட நாள் கடன் நிவர்த்தியாகும், வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும்.

**தனுசு:** மனக்கவலைகளுக்கு இடமளிக்கும், கடமையில் தடை ஏற்படும், மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளுவீர்கள், மதுபானத்தைத் தவிர்க்கவும்.

**மகரம்:** வாகனச்சாரதிகள் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறுவர், தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும் மேலடத்துச் சிபார்சும் கிடைக்கும்.

**கும்பம்:** வசதிகள் பெருகும், வாழ்க்கையும் வளமாகும், தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், இன்று சுப நாள்.

**மீனம்:** இதயம் எரிமலையாகும், எதிரிகள் தாக்குவர், ஏமாற்றத்திற்கும் இடமுண்டு, எனினும் இருள் சூழ்ந்த நிலையிலும் ஒளிக்கோடுகள் தெரியலாம், அதிக பேச்சைத் தவிர்த்து காரியத்தில் கண் வைக்கவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# யாருடைய பதக்கம்?

(யாழ்ப்பாணம்)

மைலிட்டியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த பஸ்ஸில் (799ம் இல) கண்டெடுக்கப்பட்ட சிறிய பவுண் 'பதக்கம்' ஒன்று யாழ் பஸ் நிலைய அலுவலகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

கட்டுவனைச் சேர்ந்த எஸ் சிவஞானம், மல்லாகத்தைச் சேர்ந்த க ரதிநாயகம் உடுவிலைச் சேர்ந்த க செல்வரத்தினம் ஆகிய இளைஞர்களே பஸ்ஸில் கண்டெடுத்த பதக்கத்தை யாழ் பஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

“சிற்றூழியர்களின் சிங்கள தகைமை விலக்கு

# ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதை உடன் அமுல் நடத்துக

[யாழ்ப்பாணம்]

ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தன தலைமையில் அரசாங்க சிற்றூழியர்களின் மொழிவிடயமாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இறு சேவையாளர்களுக்கு சிங்களத் தகைமையில் விதிவிலக்களிக்கப்படவேண்டுமென்று ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயத்தை உடன் அமுல்நடத்தவேண்டுமென தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கம் சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜயசூரியாவையும். பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு. மொண்டேகு ஜயவிக்கிரமாவையும் கோருகின்றது

இது தொடர்பான பிரேரணை ஒன்று தேசிய அரசாங்க சுகாதார சேவைச் சங்கத்தின் 14வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது

பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. பொ. தேவராஜா தலைமையில் இம்மாதம் 7ம் திகதி சனிக்கிழமை காலை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சி முதல்வரும் காங்கேசன்துறை தொகுதி எம். பி யுமான திரு. அ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாண எம் பி திரு. வெ. யோகேஸ்வரன், ஊர்காவற்றுறை எம் பி. திரு கா. பொ. இரத்தினம், முல்லைத்தீவு எம் பி திரு சே மா செல்லத்தம்பு, மானிப்பாய் எம் பி திரு வி தர்மலிங்கம், நல்லூர் எம் பி திரு எம் சிவசிதம்பரம், தமிழ் தொழிற்சங்கக்கூட்டணி செயலாளர் திரு ஜ தி சம்பந்தர், யாழ் மாவட்ட சௌக்கிய அத்தியட்சகர், யாழ். வைத்தியசாலை அதிபர் யாழ் மாவட்டக் கணக்காளர் யாழ் வைத்தியசாலை செயலாளர், ஆகியோருடன் பல தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள்.

இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஏனையபிரேரணைகள் வருமாறு!

சிங்கள மொழித் தேர்ச்சியின்மை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட வருடாந்த உயர்ச்சிப்பணம் சகல சிறு சேவையாளர்கட்கும் கொடுப்பதன் மூலம் சிங்கள மொழித் தகைமையில் இருந்தும் விதிவிலக்களிக்கப்படல் வேண்டும்.

தாதிகள் சேவையில் சேர்ப்பதற்குரிய வயதெல்லையை ஏ. எம் சி.ஓவர்சியர்மார்கட்கு கொடுக்கப்படும் 45 வயது எல்லைய பரிசாரகர்கட்கும் வழங்கவேண்டும்; தற்போவரை 40 வயது எல்லை நீக்கப்படவேண்டும்.

சுகாதார சேவையிலுள்ள சகல சிறுசேவையாளர்களுக்கும் தினம் 6 மணித்தியாலம் வாரத்திற்கு 5 நாட்கள் வேலை (30 மணித்தியால சேவை) வழங்கவேண்டும்.

விலைவாசிகள் விஷம்போல் ஏறுவதால் அன்றாட வாழ்க்கையை நடத்தமுடியாது திண்டாடும் அரசாங்க ஊழியர்கட்கு உடனடியாக 50 வீத சம்பள உயர்ச்சிவழங்கவேண்டும் என பிரதமரையும், ஜனாதிபதியையும் கோருகிறோம்.

யாழ் மாவட்ட சுகாதாரப் பகுதியில் கடமைபுரியும் பரிசாரகர்கள் 20 வருடம்வரை சேவைசெய்தும் இற்றைவரை சேவையில் உறுதிப்படுத்தப்படாமல் இருப்பதைவேதனையுடன் தெரிவிப்பதோடு பென்சன் உரிமைகூட மறுக்கப்பட்டுள்ளதையும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும், சுகாதார அமைச்சுக்கும் தெரிவிக்கவேண்டும்.

‘தர்மிஷ்டம்’ என்று சொல்லப்படும் அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருக்க சகல அரசாங்க தமிழ் ஊழியர்கட்கு இருப்பதுபோன்று சகல உரிமையும் வழங்கவேண்டும்.

[கா-கெ-இ]

---

## மக்கள் கருத்து

### சாதி ஒழிப்பும் அறப்போராட்டமும்

தற்போது சில தினங்களாக யாழ்ப்பாணத்தில் சாதி ஒழிப்புப்பற்றிய அறப்போராட்டக் குழுவினரின் நடவடிக்கைகளை அவதானித்தபின் பின்வரும் கருத்தை வெளியிட விரும்புகிறேன்

சாதிப்பாகுபாடு தொழில் காரணமாக எழுந்தது என்று கூறலாம். இது இந்துசமயாச்சாரத்தில் பண்டைக்காலந்தொட்டு நிலவிவந்ததொன்றாகும். பின்னர் அது தேசவழமைச் சட்டத்திலும் யாழ்ப்பாண மக்களின் மரபுகளில் ஒன்றாக இடம்பெற்றது. தேசவழமையில ஆங்கிலத்தில் இந்த முறை ‘அடிமைத்தனம்’ என்று அழைக்கப்பட்டது. அதாவது 18ம், 19ம் நூற்றுண்டுகளில் அமெரிக்காவில் எப்படி வெள்ளையர்கள் நீக்ரோ மக்களை அடிமைகளாகக் கொண்டிருந்தார்களோ, அதே போன்ற ஒரு முறை இங்கேயும் நிலவிவந்தது. ஆனால் நாகரிகம் முதிர்ச்சியுற, தனி மனித சுதந்திரக் கோட்பாட்டு முறை வளர, இந்த முறையானது அமெரிக்காவிலும் மற்றைய ஐரோப்பிய நாடுகளிலும் அற்றுப்போய்விட்டது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது மகாத்மா காந்திபோன்ற தலைவர்கள் சாதிப்பாகுபாட்டை ஒழிப்பதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதை இந்திய சுதந்திர வரலாற்றைப் படித்தவர்கள் அறிய முடியும். நமது நாட்டில் இப்போது தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் என்றெல்லாம் பேசப்படுகின்றது. தீண்டாமையை வைத்துக்கொண்டு இப்போராட்டம் நடத்தினால் அது எப்படி வெற்றிபெற முடியும்?

தீண்டாமை ஒழிப்பில் காந்தியடிகள் கைப்பற்றிய ஒரு முறை சமபந்திப் போசனமாகும் இன்று சாதியிலே மிகவும் தாழ்ந்த மட்டத்தில் வைக்கப்பட்டவர்களுடன் மற்றைய எல்லாச் சாதியைச் சேர்ந்தவர்களும் சமபந்தி போசனம் செய்விக்க அறப்போராட்டக் குழுவினர் முன்வரவேண்டும். மற்றும் அறப்போராட்டத்தில் ஈடுபடும் ஒவ்வொரு இளைஞனும், யுவதியும் தாங்கள் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணையோ அல்லது ஆணையோ தான் திருமணம் செய்வோம் என்று திடசங்கற்பம் செய்து அதனையும் நிறைவேற்றிக்காட்டுதல் வேண்டும். காந்தியடிகள் பின்பற்றிய மற்றொரு முறை இந்தக் கலப்புத் திருமண முறையாகும் அத்துடன் இன்று சாதி ஒழிக என்று மேடையில் முழங்கும் நம் தலைவர்கள், மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்க தங்கள் பிள்ளைகளையோ உறவினர்களையோ தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவருக்குத் திருமணம் செய்வித்தல்வேண்டும் ‘‘நீ உன்னைத் திருத்திக்கொள்; நாடு தானே திருந்தும்’’ என்பது முதுமொழியாகும்.

பெ. வ. ஸ்ரீரங்கன்.
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

---

“அண்ணாமலை பல்கலைக்கழகத்தில்

# தமிழ்க்கல்வியே இன்றும் பயிற்றப்பட்டு வருகிறது”

[யாழ்ப்பாணம்]

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பாரம்பரியமான தமிழ்க்கல்வியே இன்றும் பேணப்பட்டும், பயிற்றப்பட்டும் வருகிறது, அதனால்தான் தமிழ்நாட்டில் நாவலாசிரியர்களும், கவிஞர்களும் அதிகமாகத் தோன்றி வருகின்றனர்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்மைத்துறை பட்டதாரி மாணவனும் தமிழ்நாட்டு பிரபல எழுத்தாளர் ‘சோமலே’யின் புதல்வனுமான திரு. சோமசுந்தரம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு திரு க. நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. சோமசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

“இந்தியா, நிலப்பரப்பால் அதிக வளம் கொண்டது. அதனால் அங்கு பயிர்ச்செய்கை அதிகமாக விஸ்தாரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இலங்கையில் நிலப்பரப்பு மிகவும் குறைவாக உள்ளது இங்கே ஆழ உழுது, மிக நெருக்கமான முறையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. ‘‘எமது நாட்டில் குறிப்பிட்டளவு ஏக்கர் நிலமுள்ளவர்களுக்கு மட்டுமே வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருள்களுக்கு சந்தைப்படுத்தும் வசதி அதிகம் உள்ளது.

‘‘யாழ்ப்பாணத்தில் வெங்காயம், மிளகாய் அதிக அளவில் செய்கைபண்ணப்படும் போதும் விவசாயிகள் அப்பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாது கஷ்டப்படுகிறார்கள் இந்த நிலை இந்தியாவில் இல்லை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மிளகாய், வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதால் யாழ் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர் இந்த நிலை மிகவும் கவலையளிக்கிறது. இதே போல்தான் மலேயாவிலிருந்து இந்தியாவிற்கு றப்பர் இறக்குமதி செய்யப்படுகின்றது. இதனால் இந்தியாவில் உள்ள றப்பர் செய்கையாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்’’ என்று கூறினர்.

கருத்தரங்கின் இறுதியில் ஈழத்து இலக்கியம்பற்றி காரசாரமான விவாதம் நடைபெற்றது. ஈழத்து நவீன இலக்கியங்கள்பற்றிக் குறிப்பிடுகையில் இந்த இலக்கியங்கள் உளவியல், சமூக பொருளாதார அரசியல், பண்பாட்டு பிரதேசத்துறைகளுடன், இணைந்துசெல்கின்றன என்றும் அவ்வத்துறைகளின் தாக்கம் இலக்கியத்தில் இடம்பெறவதே சமூகமட்டத்தின் உயர்வுக்கும் எழுத்துக்கும் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(கொ)

---

## சங்கரத்தை முருகன் உற்சவம்

[வட்டுக்கோட்டை]

சங்கரத்தை, காந்தைக்குள வத்தை முருகமூர்த்தி கோவில் அலங்கார உற்சவம் கடந்த 28 ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

இம்மாதம் 7 ம் திகதி வரை நடைபெறவுள்ள உற்சவத்தின்போது தினமும் சமயச் சொற்பொழிவுகள நடைபெறுகின்றன. நாளை ‘கந்தபுராண போதனை’ என்னும் பொருள பற்றி யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியம் உரையாற்றுவார். (கு)

---

## குருபூர்ணிமா தினம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மத்திய பகவான் ஸ்ரீ சத்திசாயி சேவா சங்க குருபூர்ணிமா தினம் இம்மாதம் 9ம் திகதி திங்கட்கிழமை மாலை யாழ். ரசிகரஞ்சனசபா மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய நிகழ்ச்சிகளில் ‘‘குருமகிமை’’ பற்றி இவர் திரு இரா. சிவஅன்பு கதாப்பிரசங்கமும், பாலவிகாஸ் நிகழ்ச்சியும் முக்கிய அம்சமாக இடம் பெறும். [கெ]

---

## மாணவர்களின் சிரமதானப்பணி

(யாழ்ப்பாணம்)

கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய சிறுவர் வார நிகழ்ச்சிகளின்போது மாணவ மாணவிகள் மஞ்சள் மணி அம்மன் கோவிலைச்சுற்றியுள்ள மரம்செடிகளை சிரமதானம் மூலம் வெட்டித் திருத்தினர்

இச்சிரமதானத்தின்போது பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவருக்கு உற்சாகமூட்டியதுடன் கோவில் நிர்வாகசபையினர் உணவும் வழங்கினர். (கு)

---

## நாகர்கோவில் கப்பல்திருவிழா நடைபெறும்

[புலோலி]

நாகர்கோவில் ஸ்ரீ பூர்வீக நாகதம்பிரான் ஆவர்த்தனப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 15ம் திகதி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது

கடந்த எட்டுவருடங்களாக நடைபெறுதிருந்த ‘‘கப்பத் திருவிழா’’ இம்முறை நடைபெறுமெனவும் ஆலய பரிபாலன சபைச் செயலாளர் திரு சே நாகமுத்து அறிவித்துள்ளார். [அ]

---

## ரோம் பேராயச் செயலாளர் யாழ். வருகிறார்

(உடுப்பிட்டி)

ரோமாபுரியில் உள்ள பேராயத்தின் செயலாளரும், கத்தோலிக்க திருச்சபையின் நற்செய்திப் பணிச்சபைத் தலைவருமான பேராயர் டி லூர்துசாமி ஆண்டகை எதிர்வரும் 8-ல் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கிறார்

யாழ் மேற்றிராசனத்திற்கு வருகை தரும் இவர் இருதினங்கள இங்கு தங்கியிருப்பார்.

---

## டெலிவிஷன் லைசென்ஸ் 250 ரூபா

[கொழும்பு]

தொலைக்காட்சிப் பெட்டி அனுமதிப் பத்திரங்கள புத்தக வடிவில் வெளியிடப்படவுள்ளது. இம்மாதம் 16ம் திகதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் தொலைக்காட்சிப் பெட்டி உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்படும். தொலைக்காட்சிப் பெட்டியின் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 250 ஆகும்.

மேற்கண்ட தகவலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஏமன் காரியசரவண தெரிவித்துள்ளார்

தற்போது இலங்கையில் 10000 தொலைக்காட்சிப் பெட்டிகள் செயற்பாட்டிலுள்ளது இத்தொகை ஆகஸ்ட்மாதமளவில் 20000 மாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினர்.

---

## விசேட கூட்டம்

[யாழ்ப்பாணம்]

அரசபாடசாலைகளில் வசதிகள் சேவைக் கட்டணத்தில் நியமனம்பெற்ற ஆசிரியர்கள் சங்கத்தின் விசேட கூட்டம் இம்மாதம் 8-ம் திகதி குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 31-ம் திகதிக்கு முன் நியமனம் பெற்ற வசதிகள சேவைக்கட்டண நிதியில் நியமனம்பெற்ற ஆசிரியர்களை நிரந்தர நியமனம்கொடுக்க வேண்டும் என இச்சங்கம் கோரிவருகின்றது.

---

## நியமனம்

[யாழ்ப்பாணம்]

நயினாதீவைச் சேர்ந்த திரு பாலசிங்கம் சிவபாலராசா மன்னார் மாவட்ட தெங்கு அபிவிருத்தி அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார்.

இவர் குண்டசாலை தேசிய டிப்ளோமா விவசாயப் பயிற்சியில், இலங்கை அரசின் புலமைப் பரிசு பெற்று திறமைச்சித்தி பெற்றுள்ளார். இப்பதவிக்கு இதுவரை நியமனம் பெற்றவர்களில், இவரே வயதில் குறைந்தவர் ஆகும்.

[கெ-இ]

# பாகிஸ்தானை பூரண அணுசக்தி நாடாக்க லிபியா திட்டம்

## 50 கோடிடாலர் நிதிஉதவி அளிக்கும்

திரிப்போலி, ஜூலை 3 பாகிஸ்தானை பூரண அணு சக்தி நாடாகத் திகழவைக்கும் திட்டம் ஒன்றுக்கு லிபியா 50 கோடி டாலரை வழங்க முன்வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அணுசக்தியுடன் கூடிய ஏவுகணைகளை லிபியாவுக்கு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே இந்த நிதி உதவி வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஐந்து பாகிஸ்தானில் 5 ஆண்டுகளில் அணு உற்பத்தி ஆலை ஒன்று அமைக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனினும் இச்செய்திகளுக்குப் பாகிஸ்தான் பூரணமாக மறுப்புத் தெரிவித்துள்ளது. லிபிய உதவியைக் கொ...

## குவைத்- கட்டார் எண்ணை விலையை அதிகரித்தன

லண்டன், ஜூலை, 2 எண்ணை விலையை அதிகரிப்பதென்ற 'ஒபெக்' நிறுவனத்தின் தீர்மானத்திற்கமைய குவைத் எண்ணையின் விலையை 18 வீதமும் கட்டார் 20 வீதமும் அதிகரிக்க தீர்மானித்துள்ளன. [இ]

## குடத்தனையில் 10 வீடுகள்

(புலோலி)

தேர்தல் தொகுதிகள் தோறும் 10 வீடுகள் கட்டப்பட்டு வீடற்ற ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய பருத்தித்துறை தேர்தற்தொகுதியில் குடத்தனைக் கிராமத்தில் இவ்வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இத்தேர்தற் தொகுதியிலுள்ள 10 வீடற்ற ஏழைக் குடும்பங்களுக்கு இவ்வீடுகள் வழங்கப்படுமென்று பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தெரிவித்தார்.

வளர்முகநாடுகளிலிருந்து

# 15 ஆண்டுகளில் 3 லட்சம்

## மூளைசாலிகள் வெளியேற்றம்

நியூயோர்க், ஜூலை. 2 1960ம் ஆண்டுக்கும் 75ம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலப்பகுதியில வளர்முகநாடுகளிலிருந்து 3 லட்சம் மூளைசாலிகள் வெளியேறியுள்ளனர்.

இவர்கள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலிருந்து பிரிட்டன், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கே சென்றுள்ளனர்.

இந்த விபரங்கள் ஐ. நா. வர்த்தகஅபிவிருத்தி மாநாட்டு ஆராய்ச்சி ஒன்றில் இவ்விபரம் தெரியவந்துள்ளது.

இந்த 3லட்சம் பேரில் 60சதவிகிதமானோர் டாக்டர்கள், மற்ற 40 சத விகிதத்தினரில் விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள் அடங்குவர்.

இவர்களைப் பயிற்சிக்க வளர்முக நாடுகள் 1961-1972 ஆண்டுகளில் 4600 கோடி டாலர்களை செலவிட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

லண்டன் பொருளியல் அரசியல் கல்லூரியின் பேராசிரியர் திரு. ரிக்ஷர்ட் டிட்மஸ், 1969-1977 ஆண்டுகளில் அமெரிக்காவில் 150,000 மூளைசாலிகள் குடியேறினரென்றும் இதனால் அந்நாட்டுக்கு 50 கோடி டாலர் லாபம் என்றும் தெரிவித்துள்ளார்.

வருஷா வருஷம் அமெரிக்கா வந்தடையும் டாக்டர்களை அமெரிக்கா பயிற்சிப்பதாய் இருந்தால் 12 பாரிய, நவீன வைத்தியக் கல்லூரிகளை நிறுவ வேண்டிவரும். இவ்வாறு கூறினார் ஒக்லஹாமா சர்வகலாசாலை வைத்தியக் கல்லூரியின் பேராசிரியர் கெல்லிம்.

## கிராம அபிவிருத்தியில் மாதர்பங்கு

[புலோலி]

கிராம அபிவிருத்தியில் மாதர்பங்கு என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கொன்று வடமராட்சி வடக்கு கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் தலைமையில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

வடமராட்சி வடக்கு கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் பகுதியிலுள்ள சகல மாதர் சங்கத் தலைவிகளும் செயலாளர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். தத்தமது கிராமங்களின் அபிவிருத்திக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமென ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அவர்களை உதவி அரசாங்க அதிபர் கோரியுள்ளார். [அ]

# 'பாலர் கல்வி கற்பிப்பதற்கு பெண்கள் தான் ஏற்றவர்கள்'

[மாவிட்டபுரம்]

"ஒரு மாணவன் கல்வியில் முன்னேறுவதற்கு அடிப்படைக்கல்வி சிறப்பாக அமைய வேண்டும். இதனால்தான் மேலைநாடுகளில் பாலர் கல்விக்கு முக்கிய இடம் அளிக்கப்படுகிறது. பாலர் கல்வி போதிப்பவர்கள் காட்டுமிராண்டித்தனமான உள்ளம் கொண்டவர்களாக அல்லாது தாய்மை உள்ளம் கொண்டவர்களாக இருக்கவேண்டும். அப்போது தான் அவர்களது போதனைகள் பாலர்களின் மனதில் பதிய முடியும்."

இவ்வாறு வடமாநில கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பாலர் பாடசாலை பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினார்.

வித்தியாலய அதிபர் திருமதி பி சச்சிதானந்தம் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் "பாலர் கல்வி போதிப்பதற்கு பெண்கள்தான் ஏற்றவர்கள். பாலர்களின் உள்ளத்தை அறிந்து அதற்கேற்றவிதத்தில் கல்வியைப் போதிக்கக்கூடிய பொறுமை அவர்களுக்குத்தான் உண்டு. நமது பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களான பின்னர்தான் அவர்களது கல்வியில் பெற்றோர்கள் கவனம் செலுத்துகிறார்கள். அதைவிடுத்து பாலர் கல்வியில் பெற்றோர்கள் கவனம் செலுத்தினால் அவர்க...

[5-ம் பக்கம் பார்க்க]

## சுவீப்முடிவுகள்

(கொழும்பு)

பெல்மதுளை, கங்கண்ட மத்திய மகாவித்தியாலயத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 727-வது தேசிய லொத்தர் சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:

**07 W 0304**

ரூபா 1,00,000

2-வது பரிசு:

**05 S 0750**

ரூபா 40,000

3-வது பரிசு:

**01 V 0520**

ரூபா 10,000

ஒவ்வொன்றும் ரூபா 1549-80 கொண்ட ஆறுதல் பரிசு பெறும் 100 ரிக்கட்டுகள் விபரம்:

| | | | |
|---|---|---|---|
| 07 A 0674 | 09 A 0947 | 30 G 0472 | 15 H 0920 |
| 11 A 0868 | 17 A 0963 | 26 H 0135 | 30 H 0207 |
| 21 A 0410 | 21 A 0586 | 32 H 0998 | 02 J 0910 |
| 23 A 0352 | 24 A 0859 | 08 J 0339 | 12 J 0032 |
| 34 A 0320 | 10 B 0246 | 22 J 0390 | 23 J 0600 |
| 25 B 0734 | 29 B 0987 | 07 K 0977 | 18 K 0382 |
| 06 C 0376 | 13 C 0357 | 30 K 0780 | 01 L 0016 |
| 17 C 0025 | 19 C 0533 | 04 L 0967 | 11 L 0667 |
| 16 D 0746 | 23 D 0704 | 22 L 0940 | 26 L 0606 |
| 29 D 0492 | 05 E 0761 | 03 M 0821 | 16 M 0707 |
| 11 E 0574 | 17 E 0474 | 10 N 0236 | 16 N 0299 |
| 27 E 0190 | 32 E 0016 | 32 N 0461 | 07 O 0540 |
| 20 F 0050 | 23 F 0391 | 20 O 0149 | 30 P 0401 |
| 25 F 0685 | 26 F 0992 | 04 Q 0354 | 08 Q 0192 |
| 19 G 0777 | 29 G 0322 | 15 Q 0654 | 22 Q 0562 |
| | | 23 Q 0442 | 25 Q 0624 |
| | | 33 Q 0602 | 08 R 0521 |
| | | 08 R 0870 | 13 R 0471 |
| | | 25 R 0513 | 27 R 0273 |
| | | 01 S 0313 | 06 S 0463 |
| | | 23 S 0493 | 01 T 0789 |
| | | 06 T 0815 | 09 T 0734 |
| | | 18 T 0067 | 19 T 0892 |
| | | 30 T 0900 | 01 U 0030 |
| | | 04 U 0265 | 11 U 0473 |
| | | 09 V 0299 | 13 V 0145 |
| | | 27 V 0168 | 30 V 0663 |
| | | 31 V 0930 | 02 W 0784 |
| | | 08 W 0118 | 21 W 0715 |
| | | 23 W 0125 | 03 X 0709 |
| | | 12 X 0429 | 31 X 0241 |
| | | 33 X 0649 | 01 Y 0526 |
| | | 04 Y 0056 | 16 Y 0742 |
| | | 15 Z 0425 | 18 Z 0741 |
| | | 29 Z 0064 | 34 Z 0769 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை)




கொட்டகை நிறைந்த 4-வது வாரம்
REGAL Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

வெலிங்டன் தினசரி 10-30, 2-30, 6-30, & 9-45.
(யாழ்ப்பாணம்)
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்

லிடோ போன் 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கப்பலோட்டிய தமிழன்

கடைசி 3 தினங்கள் மட்டும்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6 & 9-45
(சாவகச்சேரி)
முத்துராமன் - தேவிகா கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
(புதிய பிரதி)

27 வது வாரம்
வின்சர் போன் 466 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(வண்ணக் கலர்)

3-வது வாரம்
ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி.

மனோகரா 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ் நகர்)
சிவாஜி-பத்மினி
கருணாநிதியின்
பணம்
(புதிய பிரதி)
(இதுவே யாழ்நகரில் கடைசித்தடவையாக காண்பிக்கப் படுவதால் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்)

கடைசிசில தினங்கள் மட்டும்
80-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
ராஜா
யாழ் நகர் எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி கலர் மன்மதன்

சாந்தி யாழ் நகர் - போன் 7642
10-30, 2-30, 6-30, 9-45.
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இந்திப் படவுலகின் முடிசூடா மன்னன், பழம் பெரு நடிகன் "அக்பர்" புகழ் திலிப் குமார்
இரட்டை வேடங்களில் தோன்றும்,
டஸ்தான்
இந்தி - கலர் - திடுக்கிடவைக்கும் மர்மங்கள் நிறைந்த உன்னத சித்திரம்
DILIPKUMAR - (Dual Role) SAIRABAANU
DUSTAN Hindi Color
Suspense And Thrill
Music: R. D BURMAN


## அன்னை சாரதா கட்டுரைப் போட்டி முடிவுகள்

[புலோலி]

அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. விபரங்கள் வருமாறு:-

கொழும்பு மாவட்டம்: கீழ்ப் பிரிவு- கீதா கதிர்காமநாதன், உமா கணேசன், ராஜமனோகரி தம்பிமுத்து

மேற்பிரிவு- விசாலாட்சி சிதம்பரம், சுசீலா கனகலிங்கம், லதா சுடலைமுத்து செட்டியார், அனுஷியா செல்லத்துரை

இப்பரிசு பெற்ற மாணவிகள் அனைவரும் சைவமங்கையர் வித்தியாலயத்தைச் சேர்ந்தவர்களாவர்

யாழ். மாவட்டம்: கீழ்ப் பிரிவு- நிரஞ்சினி பாலசுப்பிரமணியம், வேம்படி மகளிர் கல்லூரி இ யாமினி, செ சுமதி, யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை சி திலகா, க யசிந்தா, வேம்படி மகளிர் கல்லூரி

மேற்பிரிவு- வி கோகிலா, வேம்படி மகளிர் கல்லூரி சி உதயகலா, யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை சோ ரேவதி, வேம்படி மகளிர் கல்லூரி ந விஜயராணி, வேம்படி மகளிர் கல்லூரி வே கௌரீஸ்வரி, பூ விஜயலஷ்மி பருத்தித்துறை மதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

நற்சான்றிதழ்கள் பெறுபவர்கள் - வி வத்சலாதேவி ஸ்ரீராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி கொக்குவில் க சிவகுமாரி வேம்படி மகளிர் கல்லூரி

வடமராட்சிப்பகுதி: கீழ்ப் பிரிவு- சாந்தினி மாணிக்கவாசகம் மேதினி சந்திரசேகரம், வசந்தி சுப்பிரமணியம், கலாமதி சிவானந்தன், கயல்விழி இரத்தினசபாபதி.

இவர்களுக்கான பரிசில்களை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரம பொதுச் செயலாளர் பிர. இரத்தினசபாபதி தெரிவித்தார் [அ]

## பாலர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்க முடியும்' என்றார். [illegible] மற்றும் பலர் பேசினர். பாலர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பாலர் பாடசாலை ஆசிரியை செல்வி இ விசுவநாதன் நன்றிகூறினார். [கு]


வெஸ்லி
சாவிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சவுக்கடி
சந்திரகாந்தா

Rio Phone: 7607
(Jaffna) Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
THE ARENA
Strictly for adults.
Sex Thrill.

ரீகல்ஸ் (சுன்னாகம்)
தினசரி 4-45, 7-00 & 9 45
சனி, ஞாயிறு 2-30
DOMINO PRINCIPLE


# 'அரசியலுக்கு அப்பால்நின்று சேவைசெய்வேன்''

## யாழ். மாவட்ட அமைச்சர்

(வண்ணார்பண்ணை)

'அரசியலுக்கப்பால் நின்று யாழ். மாவட்டத்தின் நன்மையான காரியங்களைச் செய்ய நான் தயாராகவிருக்கிறேன் இந்த நாட்டில் உள்ள சகலமக்களும் அரசின் உதவிகளைப் பரவலாகப்பெற என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்''.

இவ்வாறு யாழ் மாவட்ட அமைச்சர் திரு ஏ ஆர் மன்சூர் கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்

கரவெட்டி ஐக்கியதேசியக் கட்சிக் கிளைத்தலைவரும் உடுப்பிட்டி ஐ தே கட்சிச் செயலாளருமான திரு கே சி எம் இலகுமாரன் தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பில் யாழ் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மாவட்ட அமைச்சர் திரு. மன்சூர் தொடர்ந்து பேசுகையில் நான் ஒரு தமிழ்பேசும் பிரதிநிதி என்றரீதியில் இங்கு பதவியேற்றுள்ளேன். யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்காகவும் யாழ் மாவட்ட மக்களின் நலனுக்காகவும் நான் கட்சிஅரசியலுக்கப்பால் நின்று பணிபுரியவுள்ளேன். (கு)

# கிளிநொச்சி நெல்லில் பயிர்த்தத்தி அபாயம்!

[கிளிநொச்சி]

கிளிநொச்சிப் பகுதியில் நெற்பயிர்த்தத்தி அபாயம் காணப்படுவதாக கிளிநொச்சி விவசாய இலாகா எச்சரித்துள்ளது இதுதொடர்பாக கிளிநொச்சி மேலதிக மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. என். சோமசுந்தரம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் கிளிநொச்சிப் பகுதியில் தற்பொழுது நெற்பயிர்த்தத்தி அங்கும் இங்குமாக காணப்படுகிறது இவை ஒருசில நாட்களுக்குள்ளாகவே பரவலாகப் பெருகக்கூடியன என்றும் இக்காலநிலையில் விரைவில் பன்மடங்காகக்கூடிய வாய்ப்புக்கள உண்டென்றும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்

நெல்லின் தண்டுப்பகுதியைச் சூழ்ந்துகாணப்படும் கபில நிறத்தையுடைய தத்திகள நெற்தண்டைச் சுற்றிச் சாற்றை உறிஞ்சுவதனால் நெற்பயிர் தாக்கப்படும்.

தாக்கப்படும் பயிர்கள மஞ்சள நிறமடைந்து பின்னர் கருகும். இதனைத்தத்தி எரிவு என்பர். இப்பூச்சி திருந்திய கட்டை இனங்களையும் கூடிய பசுந்தன்மையுடைய நெற்பயிரையும் விரும்பித்தாக்கும். கதிர் வந்து பால் பிடித்து முற்றும் நேரத்தில்தான் இதன் தாக்கம் மிகவும் மோசமாக இருக்கும். இத்தத்தியினால் தாக்கப்பட்ட கதிர் சப்பியாகவே இருக்கும் கதிரில் மணி திரளமாட்டாது. பயிரும் எரிந்து நவுந்துபோகும். இது ஒரு கொடிய பூச்சித்தாக்கமாகும். விளைச்சல் முழுவதுமே பாழடையும். கதிர் வர முன் வளரும் பயிரையும் இப்பூச்சிகள் இட்பேரது தாக்குகின்றன. தாக்கப்பட்ட பயிர்கள் மஞ்சள் நிறம் அடைந்து வளர்ச்சி குன்றி சோர்ந்து காணப்படும்,

நெற்பயிரில் இப்படியான பயிர்த்தத்திகள் காணப்பட்டால் உடனடியாகக் கீழ்வரும் தத்தி கொல்லிகளில் ஏதாவது ஒன்றினை விசிறி இதனைக்கட்டுப்படுத்த வேண்டும்,

உண்டன ஒரு கல்லன்பருத்தை 3 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு 60 கலன் கரைசலைத்தெளி கருவியாயின் விசிறுதல் வேண்டும்.

3 வீதம் பியூறடான் அல்லது குறேற்றர் ஏக்கருக்கு 20 றுத்தல் வீதம் ½—1 அங்குல தண்ணீரில் போடவும். (வயலில் தண்ணீர் அதிகமாக இருந்தால் குறனல் 100 வீதம் தொழிற்படமாட்டாது)

பாசா 50 வீதம் 20 நீரவுன்ஸ் 40 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு விசிறவும்.

மியோபால் 30 வீதம் 25 நீரவுன்ஸ் 40 கலன் கல

(6-ம் பக்கம் பார்க்க)

## உழைக்க முடியாததால் தற்கொலை

(புலோலி)

தான் உழைத்துத் தனது குடும்பத்தைப் பார்க்கமுடியவில்லையே என மனம் வருந்தி நோய் வாய்ப்பட்ட நபரொருவர் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்து கொண்டார். இந்த நெஞ்சை உருக்கும் பரிதாப சம்பவம் கரவெட்டி கிழக்கில் நடைபெற்றுள்ளது.

கிருஷ்ணபிள்ளை பரமு (வயது 40 என்பவரே தற்கொலை செய்தவராவர். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் விசாரணை நடத்தினார். பருத்தித்துறை பொலிசார் சாட்சியங்களை ஆஜர்செய்தனர்.

இறந்தவரின் மனைவி மாணிக்கம் (வயது 30) சாட்சியமளிக்கையில் இறந்த தமது கணவர் ஒன்றரை வருடகாலமாகப் பாரிசவாதத்தினால் பீடிக்கப்பட்டிருந்தபடியால் வேலைகள் ஒன்றும் செய்யமுடியாதிருந்தார் என்றும் இதனால் இவர் மிகவும் மனக்கவலையடைந்து காணப்பட்டதாகவும், ஐந்து மாதங்களுக்கு முன் தன்னையும் இரு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு போய் தனது பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டு அவர் புத்தூரில் உள்ள தனது சகோதரியின் வீட்டிற்குச்சென்று பின்னர் திரும்பவில்லையென்றும் சம்பவதினத்தன்று இறந்தவரின் முதல்தார மகன் தவராசா வீட்டிற்கு வந்து எனது கணவர் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்து கொண்டதாகக் கூறியதாகவும் சொன்னார். தற்கொலைஎனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [அ]

## சங்கானையில் கள் தட்டுப்பாடு

[சங்கானை]

பனம்பொருள் உற்பத்திச் சபையின்கீழ் இயங்கி வரும் சங்கானையில் உள்ள போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைக்கு சங்கானையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் பெறும் கள் பற்றாக்குறையாக இருப்பதால் சில வேளைகளில் தொழிற்சாலை ஸ்தம்பிதமேற்படுகின்றது.

காலபோகத்தில் மட்டும் போத்தல் கள் அடைக்கும் வேலை இருப்பதனால் எந்தவித தடங்கலும் விண்விரயமும் ஏற்படாவண்ணம் தொழிற்சாலை தொடர்ந்து இயங்குவதற்கு பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே சி நித்தியானந்தா மேலும் கூடுதலான கள்ளை கட்டைவேலி பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து பெறுவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளார். (கு)

# நஞ்சு கலந்த மா: மூவர் பலி!

## ஆஸ்பத்திரியில் 20 பேர் அனுமதி

(குருநாகலை)

தொடங்கஸ்லந்த தொகுதியிலுள்ள ரம்பொடகலவிலுள்ள கிராமமொன்றில், கிருமிநாசினி கலந்த மாவை உட்கொண்ட மூவர் பலியானார்கள்! இருபது பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடங்கஸ்லந்தையில் நேற்று முன்தினம் நச்சு வாயு காரணமாக மூவர் பலியானார்கள் என்று முதலில் கிடைத்த செய்திகளை தெரிவித்தபோதிலும், இம் மரணங்களுக்கு நச்சுவாயு காரணம் அல்ல என்று நேற்று பொலிஸார் தெரிவித்தனர்.

தொடங்கஸ்லந்தையில் ஒரு தோட்டத்தில், நச்சுவாயு சுவாசித்து, இருவர் பலியானார்கள் என்றும், இருபத்தொரு பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்றும் முதலில் அறிவிக்கப் பட்ட போதிலும், இதுசம்பந்தமாக விசாரணை நடத்திய பொலிஸார் நச்சுவாயு காரணமாக எவரும் பலியாகவில்லை என்றும், நஞ்சுகலந்த கோதுமை மாவை உட்கொண்டதினாலேயே மரணம் சம்பவித்துள்ளதென்றும் இப்பொழுது தெரிவித்துள்ளனர்.

ஏதோ ஒரு வகையான கிருமிநாசினி கலந்த மாவை உட்கொண்டதால் மொத்தம் மூவர் பலியானார்கள் என்றும், இருபது பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனரென்றும் பொலிஸார் நேற்று தெரிவித்தனர். ஆபத்தான நிலையிலிருந்தவர்கள் குருநாகலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கிருமிநாசினி கலந்த மாவை விற்பனை செய்ததாகக் கூறப்பட்ட கடையொன்றை பொலிஸார் 'சீல்' வைத்துள்ளனர்.

---

பாடசாலை அனுமதி:

## நன்கொடை பெறும் அதிபர்கள்மீது நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிக்க நன்கொடை பெறும் வாங்கும் அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேற்கண்ட தீர்மானம் பெற்றோர்களின் முறைப்பாட்டிற்கிணங்கவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் "பெற்றோர் பாடசாலை வளர்ச்சிக்கென மனமுவந்து நன்கொடை வழங்கினால் அதனைப் பெற்றுக்கொள்ளலாம். மாறாக பலாத்காரம் பிரயோகிப்பது குற்றச் செயலுக்கு சமமானதாகும்'' என்று கூறினார்.

இது தொடர்பான குற்றங்களில் ஈடுபடும் பாடசாலை அதிபர்கள்மீது தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

''கிராமமுன்னேற்றச் சங்கங்கள்

## அபிவிருத்தி வேலைகளை காலம்தாழ்த்தாதுசெய்யவும்'

(சங்கானை)

சிறு கைத்தொழில்கள், விவசாயம், வீதிகள் செப்பனிடல் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் கிராம அபிவிருத்திச் சங்கங்களிலேயே தங்கியுள்ளது. ஆகையால் வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள 42 கிராமமுன்னேற்றச் சங்கங்களும் தத்தமது பகுதி அபிவிருத்திகளை காலம் தாழ்த்தாது செய்ய முன்வரல் வேண்டும்.

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

வட்டுக்கிழக்கு தாவளை கிராம அபிவிருத்திச் சங்க அடிக்கல் நாட்டு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. தா. இளையதம்பி தலைமையில் தாவளை கனிஷ்ட இந்துக்கல்லூரியில் இவ்வைபவம் நடைபெற்றது.

திரு. திருநாவுக்கரசு தொடர்ந்து பேசுகையில்கூறிய தாவது:

''உள்ளூர் ஆட்சிமன்ற எல்லைக்குள் இருக்கும் வீதிகளை அமைத்தல், செப்பனிடல் போன்ற வேலைகள் யாவும் அபிவிருத்தி கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலமாக செய்வதற்கு நான் எமது தொகுதி உள்ளூராட்சி மன்றங்களிடம் கேட்டுள்ளேன். இதுவோர் நன்மையை பயக்கும் திட்டமாகும்.

42 சங்கங்கங்கள் எமது தொகுதியில் உண்டு. அவற்றில் 26க்கு நிரந்தர கட்டிடம் இல்லையால் அவற்றையும் எனது காலத்தில் தீர்த்து வைப்பேன் இங்கு உள்ள 43 குளங்களையும் புனரமைத்து அதன் மூலம் தேக்கி வைக்கப்படும் நீர் விவசாயத்திற்கு உதவும் வண்ணம் பயன்படுத்த திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதனை மக்கள் சிரமதானப் பணி மூலம் நிறைவேற்ற முன்வர வேண்டும்.

அரசினால் திறமைசாலிகள் பின்தள்ளப்படுகிறார்கள். தமிழ்மக்களை இந்த நாட்டிலிருந்து அகற்றுவதற்கே திட்டம் தீட்டப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் நாம் விழிப்புடனிருந்து விவசாய வசதியுள்ள இடங்களான வவனியா, மன்னார், திருக்கோணமலை போன்ற இடங்களில் குடியேறி நாட்டை வளம்படுத்த முற்படல் வேண்டும். இதில் இளைஞர் சமுதாயம் கவனம் செலுத்துதல் அவசியம்.

''மாறி மாறி வரும் அரசுகள் எமது பகுதி அபிவிருத்தித் திட்டத்தில் அக்கறை இன்மையால் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் 1952ன் பின்பு ஒரு தொழிற்சாலைகளும் நிறுவப்படவில்லை. ஆகவே எமது பகுதி அபிவிருத்தியில் நாம் அக்கறையுடன் ஈடுபடவேண்டும். அரசாங்கம் சிங்களவர்களைத் தமிழ்ப்பகுதியில் குடியேற்றுகின்றது. அதனால் தமிழர்களை சிங்களப் பகுதியில் குடியேற்றுவதில்லை. தேசவளமைச்சட்டம் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் வெவ்வேறாக இருப்பதால் நாமும் இந்நாட்டுப் பூர்வீக குடிமக்களே எம்மை நாமே ஆண்டோம் என்பதற்கு சான்றுகள் உள்ளன. (கு)

---

## கிளிநொச்சி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து ஏக்கருக்கு விசிறவும்.

தமரோன் 20 அவுன்ஸ் 40 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு விசிறவும்.

மேலே உள்ள தண்ணீர் மருந்துகளில் ஒன்றினை இயந்திரத் தெளிகருவியால் வீசும்போது 2 அவுன்ஸ் மருந்தை ஒரு கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு 10-15 கலன் கரைசல் விசிறவும் என்று அவர் தெரிவித்தார். (கு)

---

## யாத்திரிகர்கட்கு வசதிகள்

(புங்குடுதீவு)

நயினை நகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி நயினாதீவு செல்லும் பிரயாணிகளின் வசதிகளுக்காக இறுப்பிட்டி துறைமுகத்திலிருந்து குறைந்த கட்டணத்தில் படகு சேவையை இறுப்பிட்டி ஐங்கரன் இளைஞர் மன்றம் நடத்தி வருகிறது. இறுப்பிட்டி வழியாகச் செல்லும் பக்தர்கள் தங்குவதற்கு யாத்திரிகர் மடமும் தண்ணீர்ப்பந்தல், அன்னதான மடம் என்பவையும் இளைஞர் மன்றத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது. (கு)

---

## லூதர் ஜெயசிங்கம் நியமனம்

(மட்டுவில்)

இலங்கை பல்கலைக்கழகத்தின் புவியியல் ஆராய்ச்சித் துறை பேராசிரியராகவிருந்து அண்மையில் அமரத்துவமெய்திய திரு சோ. செல்வநாயகத்தின் இடத்திற்கு, சமூக பொருளியற்றுறை ஆராய்ச்சித் தலைவராகவிருந்த பேராசிரியர் திரு. லூதர் ஜெயசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

சைக்கிள் ஓட்டத்தில் சாதனை முயற்சி:

## வீரர் செல்வம் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறார்

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் ஓட்டத்தில் புதிய உலக சாதனையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சுன்னாகம் வளர்பிறை விளையாட்டுக்கழகத் தலைவர் திரு ஐ. செல்வராசா (செல்வம்) தொடர்ந்து உற்சாகமாக ஓடிக்கொண்டிருக்கிறார்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை தமது முயற்சியை ஆரம்பித்த செல்வராஜ் நேற்று திங்கள் காலை வரை 48 மணித்தியாலங்களில் 380 மைல் தூரத்தை ஓடியுள்ளார்.

சுன்னாகம் கோட்டைக்காடு அரசினர் பாடசாலைக்கருகாமையிலுள்ள மைதானத்தில் சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ள செல்வராசவின் சாதனை முயற்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மானிப்பாய் எம் பி திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் ''வீரன் செல்வராசா புதிய சாதனையை நிலைநாட்டி தமிழினத்திற்குப் புகழ்தேடித் தரவேண்டும்'' என்றார்.

சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு சுகுனேந்திரன் மங்களவிளக்கேற்றி இவரது முயற்சியை ஆரம்பித்துவைத்தார். வடபிராந்திய லயன்ஸ் கிளப் தலைவர் திரு அ சோமசுந்தரம்பிள்ளை, உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு செபநேசன் ஆகியோர் மாலை அணிவித்து வாழ்த்தினர்.

வைத்தியகலாநிதி ஆர். இராஜேந்திரம் வைத்திய உதவிகளைக் கவனித்துவருகிறார்.

இதே இடத்தில் டுவிஸ்ட் நடனத்தில் உலக சாதனையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள மற்றுமொரு வீரர் கே தவராசாவும் தொடர்ந்து ஆடிக்கொண்டிருக்கிறார். (கு)

---

## இருவர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

இரண்டு குழந்தைகளின் தந்தையான ஒருவருக்கும் அவரது மனைவியின் தங்கைக்குமிடையே ஏற்பட்ட இரகசிய உறவு அம்பலத்துக்கு வரவே, இருவரும் கிருமிநாசினி அருந்தி தற்கொலைசெய்து கொண்டனர்! இச் சம்பவம் நீர்வேலியில் நிகழ்ந்துள்ளது.

நீர்வேலியைச் சேர்ந்த இரத்தினசிறி, (25 வயது) மங்களேஸ்வரி (21 வயது) ஆகிய இருவரினதும் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற மரண விசாரணையின்போது மேற்படி விபரம் தெரியவந்தது. மரணவிசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரியும் பதில் நீதவானுமான திரு. எஸ். அமிர்தலிங்கம் நடத்தினார்.

இரத்தினசிறிக்கும் அவரது மனைவியின் தங்கை மங்களேஸ்வரிக்குமிடையே நீண்ட நாட்களாக இரகசிய உறவு இருந்ததென்றும் இவர்கள் கோப்பாயில் ஒன்பது மாதங்கள் இருந்தனர் என்றும் சம்பவம் நடைபெற்ற தினம் இவர்களிருவரும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர் என்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. இருவரும் வீட்டின் முன்புறத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டனர். திருமணமாகாத மங்களேஸ்வரி எட்டு மாதக் கர்ப்பிணி என்று விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது

---

### காணவில்லை

யாழ்ப்பாணம் — அரியாலையைச் சேர்ந்த நாகலிங்கம் வசந்தகுமாரை நேற்றுக் காலை முதல் காணவில்லை. இவர் மூன்றரை அடி உயரமும், பொதுநிறமும் உடையவர், வயது பதினொன்று இருக்கும். கடைசியாக காணப்பட்டபோது நீல நிற சேட்டும் கறுப்புக் களிசானும் அணிந்திருக்கக் காணப்பட்டார். வயிற்றில் நெருப்புச் சுட்ட காயமுண்டு. இவரைக் கண்டவர்கள் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ, எமக்கோ தகவல் தந்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். திருமதி ஆர். நாகலிங்கம், 122 கண்டி வீதி, யாழ்ப்பாணம். 2935

---

## வெளிநாட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் சன்சோனிக்கமிஷன் விசாரணை நடைபெற்றபோது இன்ஸ்பெக்டர் குருசாமி யாழ்ப்பாணத்தில் நடந்த சில சம்பவங்கள் தொடர்பாக சாட்சியமளித்தார்.

## இன்று மரணச்சடங்கு

56 வயதான இன்ஸ்பெக்டர் குருசாமியின் இறுதிச் சடங்கு ஓட்டுமடத்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கிறது. இன்று கொழும்பிலிருந்து உயர்தர பொலிஸ் அதிகாரிகள் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்வார்கள். முழு பொலிஸ் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெறும். கொழும்பிலிருந்து பொலிஸ் பாண்ட் வாத்தியக்கோஷ்டி பங்குபற்றுவதுடன் பொலிசாரின் மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படும். (கோ)

---

## பஸ் சேவை பாதிப்பு!

(தெல்லியடி)

உடுப்பிட்டிக்கும் தொண்டமனாறுக்குமிடையே நேற்று பஸ் சேவை நடைபெறாததால், பிரயாணிகள், குறிப்பாக மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினமிரவு இப் பாதைவழியாகச் சென்ற பஸ்ஸுக்கு கல் வீசப்பட்டதன் எதிரொலியாகவே நேற்று பஸ்சேவை நடைபெறவில்லை என்று கூறப்படுகிறது.

---

## கல்விச்சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவர்கள், இம்மாதம் 12, 13-ம் திகதிகளில் கல்விச்சுற்றுலாவொன்றினை மேற்கொண்டு வடபகுதியின் சரித்திர, சமய இடங்களைப் பார்வையிடவுள்ளனர். (ஈ)

---

நெடுங்கேணியில்

## புதிய பஸ்தரிப்பு நிலையம்

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணியில் புதிய பஸ் தரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இந்த பஸ் தரிப்பு நிலையத்திற்கு நெடுங்கேணி கிராமசபையினால் 22 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கிசெய்யப்பட்டுள்ளது.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி [illegible] இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegrams: Eelanaadu, [illegible] 288.